பக்கங்கள்: ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 16 ஞாயிற்றுக்கிழமை ( 30 - 01 - 2000 ) VALAMPURI ஒலி: 42

## அரசியலமைப்பு சீர்திருத்தம்—

# நாடாளுமன்றில் சமர்ப்பித்த பின் விடுதலைப் புலிகளுடன் பேச்சு!

## பொ. ஐ. ஐ. மு. தீர்மானம்

(கொழும்பு)

**இனப்பிரச்சினை தொடர்பாக நிரந்தர தீர்வொன்றை ஏற்படுத்தக் கூடிய வகையில் புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் ஆரம்பிக்கும்.**

'புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்' என்று பொது ஜன ஐக்கிய முன்னணியின் அரசியலமைப்புத் தொடர்பான விசேட குழுவின் கூட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்-திருமலை கப்பல் சேவைக்கு புதிதாக "சிற்றி ஒவ் றிங்கோ"

### திங்களன்று திருமலைக்கு வரும்

(கொழும்பு)

திருமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவைக்கு ''சிற்றி ஒவ் றிங்கோ'' என்னும் கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

இக் கப்பல் யப்பானில் இருந்து சிங்கப்பூருக்கு எடுத்துவரப்பட்டு பின் சிங்கப்பூரில் இருந்து கொழும்புத்துறைமுகத்திற்கு நேற்று முன்தினம் வந்துசேர்ந்துள்ளது.

நாளை திங்கட்கிழமை திருமலைக்கு வரவிருக்கும் இக் கப்பல் ஐ. சி. ஆர். சி. கொடியுடன் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

இக் கப்பல் சேவை எப்போதில் இருந்து ஆரம்பிக்கப்படும் என்று தீர்மானிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே பயணிகள் சேவைக்குப் பாவிக்கப்படவிருக்கும் இக் கப்பலை இராணுவத் தேவைகளுக்கு பாவிப்பது இல்லை என பாதுகாப்பு அமைச்சு உறுதி அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

## யுத்தத்தைக் கைவிட்டு புலிகள் பேச்சுக்கு முன்வரவேண்டும்

### - சமாதானத்துக்கான கூட்டணி -

விடுதலைப் புலிகள் யுத்தத்தின்மீது கொண்டுள்ள நம்பிக்கையைக் கைவிட்டு சுமுகமான அரசியல் தீர்வு ஒன்றை எட்டும் வகையில் சமாதானப் பேச்சுக்கள் மீதான தமது விருப்பத்தை வெளியிட வேண்டும் என சமாதானத்துக்கான கூட்டணி விடுத்துள்ள அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; 'மனித அவலங்கள் நிறைந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக சகல அரசியல் கட்சிகளும் பேதங்களை மறந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர் பிரச்சினை குறித்து இன்று ஆராய்வு

### டிவகலாலாவுடன் த. ஆ. ச. சந்திப்பு

வடக்குக் கிழக்கு மாகாண ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் பொருட்டு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தலைமையிலான குழுவொன்று இன்று ஞாயிற்றுக் கிழமை வடக்குக்கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவைச் சந்திக்கவுள்ளது.

இச் சந்திப்பின் போது ஆசிரியர்கள் எதிர்நோக்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இல. பிரச்சினை உள்நாட்டு விவகாரம் வெளியாரின் தலையீடு அவசியமற்றது

### -குஜ்ரால் தெரிவிப்பு-

(கொழும்பு)

இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் யுத்த சூழல் மற்றும் அவை தொடர்பான பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கமே தீர்வு காணவேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வில் வெளியாரின் தலையீடு அவசியமற்றது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திர்குமார் குஜ்ரால் நேற்றுஅதிகாலை 3.30 மணிக்கு கொழும்பு வந்தசமயம் 'வலம்புரி' செய்தியாளர் தொடர்புகொண்டு கேட்டபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

படுகொலை செய்யப்பட்ட கலாநிதி நீலன் திருச்செல்வத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முன்னாள் ஐ. தே. க. அமைச்சர் காலமானார்

(கொழும்பு)

முன்னாள் ஐ. தே. க. அமைச்சர் ஈ. எல். சேனநாயக்கா தமது 79 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

1943 ஆம் ஆண்டு கண்டி மாநகரசபை உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டு அரசியலில் பிரவேசித்த இவர் ஐ.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளராக கலாநிதி தணிகாசலம் பிள்ளைநியமனம்

வடமராட்சிக் கல்வி வலயத்தின் பணிப்பாளராகக் கலாநிதி என். தணிகாசலம் பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பணிப்பாளராக இருந்த தணிகாசலம்பிள்ளை அண்மையில் வெளிநாடு சென்று திரும்பிய பின் வடக்குக் - கிழக்கு மாகாணக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஏற்ற ஆட்சிமுறையை அறிஞர் சபையே தீர்மானிக்க வேண்டும்

### கண்டி மல்வத்த பீட பிக்குதெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு ஏற்ற ஆட்சி முறை எது என்பதனை இலங்கையில் உள்ள அறிஞர்களை கொண்டசபை தெரிவு செய்து அதனை அரசியல் வாதிகளிடம் பரிந்துரை செய்வதே பொருத்தமானது.

கண்டி மல்வத்தபீட சங்க உறுப்பினர் அலுத்கமகே தம்மானந்த தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டியில் டி. எஸ். சேனநாயக்கா கட்டடத்தில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வரவு-செலவுத் திட்டம்

(கொழும்பு)

இலங்கை அரசின் இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் பெப்ரவரி 15 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதங்கள் அடுத்த மாதம் 17 ஆம் திகதி முதல் 3 வாரங்களுக்கு நடைபெறவுள்ளது என்று நாடாளுமன்ற வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(திருகோணமலை)

98ம் ஆண்டில் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப் படாதவர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப் படவுள்ளதாக, வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறைச் சிறைச்சாலை மோதலில் மூன்று தமிழ்ப் பெண் கைதிகள் காயம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் நேற்று பெண் கைதிகளுக்கும் பெண்சிறைக்காவலர்களுக்குமிடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக மூன்று தமிழ்ப் பெண்கள் காயமடைந்துள்ளனர்.

களுத்துறைச் சிறைச்சாலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### அறியத்தருகின்றோம்

காரைநகர் மணற்காட்டைச் சேர்ந்த சாம்பசிவ ஐயர் சிற்சபேச சர்மா ஆகிய நான் கீழ் கண்ட விலாசத்தில் தற்போது வசித்து வருகிறேன். சிவகாமி அம்மன் கோவிலடி, ''சத்யகிரி'', இணுவில் கிழக்கு, இணுவில். (கி-43)

## இன்றைய நிகழ்வுகள்

(மரணவாய்)

இமையாணன் அ.த.க வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் இன்று 2.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு பதி. என்.சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (கு-27)

★ ★ ★

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக நிலையங்களுக்கான கூட்டம் இன்று 30ஆம்.திகதி காலை 10.00 மணிக்கு தலைவர் சு.கதிர்காமத்தம்பி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இன்றைய கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறவுள்ளது. (க)

## கலந்துரையாடல்

[மாணிப்பாய்]

மானிப்பாயில் கிராமிய வைத்தியசாலை அமைத்தல் தொடர்பான விஷேட கலந்துரையாடல் ஒன்று நாளை 31ஆம் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு இடம்பெற உள்ளது.

யாழ். வீதியிலுள்ள சபை அலுவலகத்தில் சட்டத்தரணி இரா. வசந்தசேசன் தலைமையில் இடம் பெறும். இக்கலந்துரையாடலில் பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்வர். (க)

# மானிப்பாய் மத்திய மருந்தகத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டாம்

## -பொது அமைப்புகள் கோரிக்கை

(மானிப்பாய்)

மானிப்பாய் மத்திய மருந்தகத்தை வேறு இடத்திற்கு இடம் மாற்றம் செய்ய வேண்டாமெனக் கோரி நவாலி ஆனைக்கோட்டை, மானிப்பாய், உயரப்புலம், சாவற்கட்டு, ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருபது பொது அமைப்புகள் சண்டிலிப்பாய் பிரதேசசெயலளர் சுகாதார சேவைகள் பணிப்பாளர், வட பிராந்திய இணைப்பாளர் ஆகியோருக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளன.

இந்த மகஜரில், தெரிவிக்கப்பட்டதாவது; ஐம்பதுவருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் இவ் வைத்தியசாலையில் மானிப்பாய், உயரப்புலம், ஆனைக்கோட்டை, சாவற்காடு, நவாலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் எவ்வித சிரமமுமின்றி சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் இவ் வைத்தியசாலையில் பிரசவ விடுதியும் அமைந்திருப்பதனால் தற்போதைய போர்க்கால சூழ்நிலைகளில் நள்ளிரவு வேளையிலும் போக்குவரத்துக்கஷ்டமின்றி இவ் வைத்தியசாலைக்குச் சென்று பிள்ளைகளைப் பிரசவிக்கின்றனர்.

இந் நிலையில் இதனை தற்போது வேறு இடத்திற்கு; பல மைல் தூரத்திற்கப்பால் கொண்டு சென்று அமைக்கும் முயற்சியை தாம் வன்மையாக எதிர்க்கின்றோம். என்று மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-க)

## மனையியல் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவு சபையினால் நடாத்தப்படவுள்ள இலவச மனைப் பொருளியல் அடிப்படைப் பயிற்சி நெறிக்கான தகுதியான பயிற்சியாளர்களைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை எதிர்வரும் புதன்கிழமை 2 ஆம் திகதி நடை பெறவுள்ளது.

பயிற்சி பெற விரும்பும் மகளிர் அனைவரையும் அன்றைய தினம் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (கு-7)

## இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

இயங்கிக் கொண்டிருந்த மர அரிவு இயந்திரத்தில் கைசிக் குண்ட இளைஞர் ஒருவர் காயமடைந்த சம்பவமொன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுள்ளது.

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த இராஜ்குமார்-ரமேஸ்குமார் (வயது 17) என்ற இளைஞரே காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கு)

## உயர் தொழில் நுட்ப நிறுவனத்தினால் இவ் ஆண்டில் புதியகற்கைநெறி அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய வணிக டிப்ளோமாவிற்கு (H.N.D.C) க்குப் பதிலாக உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (H.N.D.M) 2000 ஆண்டுத் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உயர் தேசிய முகாமைத்துவ பயிற்சி நெறியில் முதலாம், இரண்டாம் வருடப் பாடங்களில் 50% ஆங்கில மொழி மூலம், 50% பாடங்கள் தமிழ் மொழி மூலமும் நடைபெறும், மூன்றாம், நான்காம் வருட பாடங்கள் அனைத்தும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.

உயர் தேசிய முகாமைத்துவ பாடநெறியில் முகாமைத்துவ தந்திரோபாயம், மனிதவள முகாமைத்துவம், நுகர்வோர் நடத்தை, கைத்தொழிலும் நிறுவன உளவியலும், ஆய்வு நுட்ப ஆராய்ச்சி போன்ற புதிய கற்கைகள் அறிமுகப் படுத்தப்படுகிறது. அத்துடன் தேசிய மட்டத்தில் தகவல் தொழில் நுட்பத்துக்கான ஒரு அங்கிகரிக்கப்பட்ட தகுதிப்பத்திரத்தை வழங்கும் கற்கை நெறியாகவும் இது விளங்குகின்றது.

இப்பயிற்சி நெறியை யாழ். குடாநாட்டு மாணவர்கள் முறையாக பயன்படுத்தி நன்மை அடைவதற்குரிய வசதிகளை யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப நிறுவனம் வழங்கிவருகின்றது. இக் கற்கை நெறிக்கு சேர விரும்புவோர் அடுத்தமாதம் 7 ஆம் திகதிக்கு முன் உயர் தொழில் நுட்ப இயக்குநருடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் இரண்டு வருடத்துக்கான தேசிய வியாபார நிதியியல் கற்கை நெறிக்கு சேர விரும்பும் மாணவர்களும் இயக்குநருடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கல்லூரியில் மிதிவெடி மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி வளாவினுள் நேற்று முன்தினம் மிதிவெடி ஒன்று கண்டெடுக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (க-9)

## வாழைக் குலைகளை கொழும்பிற்கு அனுப்ப கோப்பாய் சம்மேளனம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பகுதியில் உற்பத்தி செய்யப்படும் வாழைக்குலைகளை கொழும்பிற்கு கப்பல்மூலம் அனுப்பும் முயற்சியில் கோப்பாய் விவசாய சம்மேளனம் தீவிர முயற்சி மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயம் தொடர்பாக யாழ். அரச அதிபருடன் தொடர்புகொண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும் இம்முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் கிரமமானமுறையில் விவசாயிகளிடமிருந்து வாழைக்குலைகள் பெறப்பட்டு கொழும்பிற்கு அனுப்பும் நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப் படும் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

தற்பொழுதுவாழைக்குலையின் விற்பனைவீழ்ச்சியடைந்திருப்பது குறித்து வாழை பயிரிடுவோர் அதிருப்தி நிலையில் உள்ளனர். (க)

தரமான அச்சுவேலைகளை தாமதமின்றி செய்து கொள்ள

2789

↓

DEVI PRINTERS JAFFNA

தேவி அச்சகம்

114/19, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.

(128) (தேவி அச்சக ஒழுங்கை)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு நடாத்தும்

பண்ணிசைப் போட்டி - 2000

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத்தனியாகவுமென 3 பிரிவுகளைக் கொண்ட பண்ணிசைப் போட்டியை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நான்கு நிலையங்களிலும், இறுதிப் போட்டியை யாழ்ப்பாணத்திலும் நடாத்தி மகாசிவராத்திரிதினத்தன்றுபரிசளிப்பினை நடாத்துவதென எமது குழு தீர்மானித்துள்ளது.

போட்டிக்குரிய விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அதிபர்களிடமிருந்தோ அன்றேல்யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதியிலிருந்தோ ரூபா. 20/-ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 11 - 02 - 2000

சைவசமய விவகாரக் குழு

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(கி-42)

### நீர்வேலி

## ஐக்கிய வாழைக்குலைச் சங்கத்தை மிண்டும் இயக்க தீவிர முயற்சி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஐக்கிய வாழைக் குலை விற்பனை சங்கத்தை மீண்டும் இயக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பயனுள்ள இச் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் இப்பகுதி பிரதேச சபை, மற்றும் பொது அமைப்பினர் தமது பங்களிப்பினை கட்டாயமாக வழங்க வேண்டியது அவசியம் என்றும் இப்பகுதி பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சங்கம் 1959 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து செயற்பட்டு வந்ததும் நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் விவசாயிகள் இச் சங்கத்தவர் பெரிதும் பயன் பெற்று வந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இச் சங்கமானது நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் செயற்பட முடியாமல் பல வருட காலம் ஸ்தம்பித நிலையில் இருந்து வருவதும் தெரிந்ததே. (க)

## இராசி பலன்

30.01.2000

ஞாயிற்றுக்கிழமை (தமிழுக்கு தை 26)

நவமி காலை 8.27 வரை, பின் தசமி; விசாகம் காலை 7.53 வரை, மரணயோகம் இராகுகாலம் மாலை 5.36 முதல் 7.04 வரை. சுபநேரம் காலை 10.06 முதல் 11.36 வரை.

**மேடம்:** சகோதரர் தொல்லை, தொழில் கஸ்டம், வெறுப்பு.

**இடபம்:** அதிகமூலதனமிடல், புதிய முயற்சி, வெற்றி.

**மிதுனம்:** சுகபோஜனவசதி, தான தர்மம், மனத்திருப்தி.

**கடகம்:** பொருள் நஷ்டம், தகாத உறவு, உடல் ரோகம்.

**சிங்கம்:** போராட்ட நிலை, குடும்ப வேற்றுமை, அலைச்சல்.

**கன்னி:** பலமான திருப்பம், தொழிலக்கறை, பணவரவு.

**துலாம்:** குடும்பப் பொறுப்பு, வீண் பேச்சு, கலவரமனம்.

**விருச்சிகம்:** தொழில்மேன்மை, சயன சுகம், உற்றார் வருகை.

**தனுசு:** பெண் அவமானம், எதிரி பயம், கூனிக்குறுகுதல்.

**மகரம்:** மித்திரர் உதவி, குழந்தை பாசம், விவேகம்.

**கும்பம்:** சுப நிகழ்ச்சி, தொழில்லாபம், நண்பர் அறிவுரை.

**மீனம்:** வீண்பழி, திருப்தியற்ற சூழ்நிலை, மனச்சுமை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## நேர்முகப் பரீட்சை

[மானிப்பாய்]

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி, தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் இரண்டாயிரமாவது ஆண்டிற்கான தையல் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை 31ந் திகதி திங்கள் காலை 9-30 மணி முதல் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம் பெறுமென்று அறிவிக்கப் பட்டுள்ளது. (க)

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
புதிய வெளியீடு
விஜயகாந் (இரட்டை வேடம்)
பிரபு தேவா, மீனா நடித்த
வானத்தைப் போல
(CD பிரதி)
(சிறந்த குடும்பச் சித்திரம்)
காட்சிகள்
10. 30, 2. 30 (ப.நே)
(00115)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயாணியின்
சூரிய வம்சம்
(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)

# செய்தித் துளிகள்

## ஆற்றல் சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் திறமைகளை வெளிக்கொணரும் விதத்தில் 'ஆற்றல்' மாத சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியத்தின் அனுசரணையுடன் வெளியிடப்படும் இச் சஞ்சிகை படிப்படியாக வளர்ச்சியடைந்து 24 பக்கங்களுடன் பத்தாவது இதழ் வெளியிடப்பட்டுள்ளது.

இவ் அமைப்பில் இணைய விரும்புவோர் செயலாளர், ஆற்றல்மேம்பாட்டு ஒன்றியம், 76, கண்டிவீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சனசமூகநிலைய கட்டட திறப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கு கதிரொளி சனசமூக நிலைய கட்டடம் அண்மையில் கோப்பாய் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது,

அச்சுவேலி பிரதேச சபையின் 98,99ஆம் ஆண்டுக்கான விஷேட நிதியில் இருந்து 90 ஆயிரம் ரூபா செலவில் இக்கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சிறப்பு விருத்தினராக கலந்து கொண்ட ஈ.பி.டி.பி அமைப்பின் கோப்பாய் பிரிவு அமைப்பாளர் ஏ. ரவி அச்சுவேலிப் பகுதியில் நீர்வழங்கல் கலாச்சார மண்டபம் அமைத்தல் ஆகியவற்றுக்காக இவ்வருட இறுதிக்குள் 10 இலட்ச ரூபா நிதி ஒதுக்கப்படும் என உறுதியளித்துள்ளனர். (க-57)

## கோப்பாயில் திருடர் தொல்லை

(கோப்பாய்)

கோப்பாய்ப் பகுதித் திருடர்கள் தமது கைவரிசையைப் பாடசாலைகள் மீதும் காட்டியுள்ளனர்.

கோப்பாய் ம.வி, கோப்பாய் தெற்கு றோ.க, கோப்பாய் நாவலர், நீர்வேலி சீ.சி போன்ற பாடசாலையில் இவ்வாறு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதால் கற்றல் கற்பித்தல் நிகழ்ச்சிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதிக் கல்விச் சமூகம் கவலை வெளியிட்டுள்ளது.

இச் சம்பவங்கள் குறித்துப் பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-79)

## நூல்கள் அன்பளிப்பு

(அச்சுவேலி)

நீர்வேலி அத்தியர் இந்துக்கல்லூரிக்கு 10 ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான நூல்கள் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் கோப்பாய் அமைப்பாளர் ரவி, பாடசாலையின் அதிபரிடம் அலுவலகத்தில் வைத்து இப் புத்தகங்களை கையளித்தார்.

இவற்றுள் சிறுவர்களுக்கான ஆங்கிலப் புத்தகங்களும் அடங்குகின்றன. (க-57)

## மின்விளக்கு பொருத்தல்

(பருத்தித்துறை)

தம்பசிட்டி வீதியில் உள்ள மின் கம்பங்களில் புதிய மின் விளக்குகள் இலங்கை மின்சார சபையினால் பொருத்தப்பட்டுவருகிறது.

இம் மின் கம்பங்களில் முன்பு பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் திருடர்களால் திருடி செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-11)

## ஜீ. ரீ. சற்றின் குறுங்கால பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

குறுகிய கால பயிற்சித் திட்டத்தின் கீழ் நவீன பொருளாதார வர்த்தகப் பயிற்சி ஒன்று ஜீ. ரீ. சற் நிறுவனத்தினரால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

14 நாட்கள் கொண்ட இந்தப் பயிற்சி நெறியில் ஏற்கனவே வர்த்தக முயற்சியில் ஈடுபட்டுவருபவர்களும் புதிய வர்த்தக முயற்சியில் தம்மை ஈடுபடுத்த விரும்புவோரும் பங்கு பற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-14)

## மாணவர்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

நாட்டு நிலமைகள் காரணமாக கஷ்ட நிலையிலுள்ள பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குவதற்கு கடற்றொழிலாளர் சங்கமும் யாழ். வணிகர் கழகமும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன. (கு-14)

## ஆசிரியருக்கு தட்டுப்பாடு

(வேலணை)

யாழ். வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பு வர்த்தகப்பிரிவுக்கு கணக்கீடு, வணிகக்கல்வி ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை எனதெரியவருகின்றது.

சென்றவருடம் இருந்த ஆசிரியர்கள் இடமாற்றப்பட்டமையினாலே இந்த வெற்றிடம் ஏற்பட்டதாகும்.

எதிர் வரும் ஒகஸ்ட்மாதம் பரீட்சை எழுதும் பிரிவுக்கு இந் நிலைமை ஏற்பட்டுள்ளதையிட்டு மாணவர்கள் பெரும் கவலையடைந்துள்ளார்கள். இதே வேளை இவ் விடயம் தொடர்பாக அதிபர் வலயக்கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டும் இதுவரையும் எதுவித நடவடிக்கையும் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. (க-75)

## மகா வித்தியாலய தினம்

(யாழ்ப்பாணம்)

யா/மெய்கண்டான் மகா வித்தியாலய; வித்தியாலய தினமும், சைவப்புலவர் சு. செல்லத்துரையின் ''வள்ளல் ஏழூர்'' என்ற சிந்து நடைக்கூத்து நூல்வெளியீடும் எதிர்வரும் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் அ. பேரம்பலம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சங்கீத பூஷணம் சு. கணபதிப்பிள்ளை முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (கு-7)

---

கல்விச் சுற்றுலா மேற்கொண்டு

# கடலில் பலியான ஹாட்லி மாணவர் குடும்பங்களும் 2 இலட்சம் பெற்றன

(புலோலி)

கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலிருந்து சென்று கடலில் பலியான உயர் வகுப்பு விஞ்ஞான மாணவர்களான நால்வரது குடும்பத்துக்கும் ஜனாதிபதி நிதியிலிருந்து இரண்டு இலட்சம்) ரூபா வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இம்மாணவத் தலைவர்கள் நால்வரினதும் மரணங்கள் பற்றி அறிந்து கொண்ட ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நால்வரினதும் குடும்பங்களுக்கு இம் மரணம் சம்பந்தமாக ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்திருந்தார்

சுந்தரலிங்கம்சிவோத்தமன் (கரவெட்டிமத்தி) சிவநாதன். ரவிசங்கர் (கரணவாய்தெற்கு) பாலகிருஷ்ணன். பிரதீபன்(தொண்டைமனாறு)பூரணமூர்த்தி. கந்தர்வன் (அல்வாய்வடக்கு) ஆகியோரே கல்விச்சுற்றுலாவின் போது பலியானவர்களாவர். (க-52)

## ஐ. தே. கட்சி உறுப்பினர் கறுப்புப் பட்டியணிந்து பதவியேற்பு

(கொழும்பு)

வடமேல் மாகாண ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் அண்மையில் கறுப்புப்பட்டியணிந்து பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இதேவேளை ஐக்கியதேசியக் கட்சியின் உறுப்பினர் பட்டியலில் முதலில் உள்ளவரான காமினி ஜெயவிக்ரம் பெரேரா பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொண்ட போதும் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவில்லை.

வடமேல் மகாணசபை கடந்த ஒரு வருடமாக இயங்கிய போதும் இதுவரை காலமும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பதவியேற்காமல் பகிஷ்கரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## வவுனியா இராணுவ முகாமில் உள்ள 11 தமிழர்களின் பெயர் விபரங்கள்

(வவுனியா)

வவுனியா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 11 தமிழ் இளைஞர்களின் விபரங்கள வருமாறு;

தனபாலசிங்கம் பதிமானந்தன் (வயது 26) தோணிக்கல், குமாரசாமி சுரேஸ்குமார் (வயது-32) வவுனியா, செல்லையா இராமன் (வயது-24) சிதம்பரம், லக்ஸ்மன் பாலகிருஸ்ணன் (வயது 17) தோணிக்கல், சிற்றம்பலம் றமேஸ் (வயது-23) ஓயார் சின்னங்குளம், அலோசியஸ் அன்ரன் கிறிஸ்ரிராசா (வயது-20) சிலாபத்துறை, செல்வரட்ணம் றஞ்சன் செல்வக்குமார் (வயது-30) ஆசிரியர், நெடுங்குளம், கந்தசாமி கணேஸ் (வயது34) சிலாபத்துறை, நடேசன்பழனி(வயது 22) கோட்டம், ஆறுமுகம் ராஜேஸ்வரன் (வயது-18) கந்தபுரம் தர்மராசா சூரியபுத்திரன் (வயது-24) சாஸ்திரி கூழாம்குளம்.

## முருகன் புகழ் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு செல்வச் சன்நிதி சன்நிதியான் ஆச்சிரமத்தில் சி. சக்திகிரீவன் எழுதிய 'முருகன் புகழ்' என்ற நாலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வு காலை 9-00 மணிக்கு பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகும். (கு-7)

# மட்டக்களப்பில் 9 வருடங்களில் 4684 பேர் மரணமடைந்தனர்

(மட்டக்களப்பு)

கடந்த 9 ஆண்டுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 4684 பேர் திடீர் மரணமடைந்துள்ளனர் 1991 முதல் 1999 ஆம் ஆண்டு வரையே மேற்படி தொகையினர் திடீர் மரணமடைந்துள்ளதாக புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

விபத்து, தற்கொலை, ஆட்கொலை, பாம்புக்கடி, துப்பாக்கிச்சூடு, நீரில்மூழ்குதல், தீப்பிடித்தல், இயற்கை மரணம் போன்றவற்றாலேயே மேற்படி மரணங்கள் ஏற்பட்டுள்ளது.

1991 இல் 436பேரும், 1992 இல் 400 பேரும், 1993 இல் 416 பேரும், 1994 இல் 197 பேரும், 1995இல்681 பேரும், 1996 இல் 548 பேரும், 1997 இல் 543 பேரும், 1998 இல் 554 பேரும், 1999 இல் 519 பேருமே இவ்வாறு திடீர் மரணமடைந்தவர்களாகும்.

இவர்களில் அதிகமானோர் துப்பாக்கிச்சூடு, தற்கொலைகளாலேயே இறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-60)

## முக்கிய அரசியல் பிரமுகர்கள் விரிவான முறையில் பேச்சு நடாத்தினர்

மலையக மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் மூன்று முக்கிய பிரமுகர்கள் விரிவான முறையில் பேச்சுவார்த்தையை நடாத்தியுள்ளனர்.

மலையக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினை, மற்றும் வடக்கு- கிழக்கு தமிழர் எதிர் நோக்கும் பிரச்சினைகள், சட்ட - ஒழுங்கைப் பேணல் தொடர்பாகவும் விரிவான முறையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தேசியத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம். எஸ்.செல்லச்சாமி, மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், மற்றும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பிரமுகர் ஒருவருமே பேச்சுவார்த்தை நடாத்தியவர்கள் ஆவர்

## கோவில்களில் உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டு வருகிறது

(பருத்தித்துறை)

புலோலி மேற்கில் உள்ள கோயில்களில் உண்டியல்கள் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

இது பற்றி மேலும் தெரிய வருகையில் தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் கோயில் உண்டியலை திருடர்கள் உடைத்ததுடன் மடப்பள்ளியில் பூசகரின் சேட் பொக்கற்றிலிருந்து 2000 ரூபா பணத்தினையும் அபகரித்து சென்றுள்ளனர்.

முதலியம்மன் கோவில், வயிரவர் கோவில், கண்ணகை அம்மன் கோவில் உண்டியல்களும் இவ்வாறு உடைக்கப்பட்டு பணத்திருட்டு இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-11)

## உளவளப் பயிற்சி நெறி

யாழ். சாந்திகம் உளவள நிலையத்தினால் நடாத்தப்படவுள்ள குறுகிய கால உளவளப் பயிற்சி வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக 'சாந்திகம்' உளவள நிலைய நிர்வாக உத்தியோகத்தர் க. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே புதிய பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்துள்ளார். (கு-14)

## இன்று

(இளவாலை)

வண்ணை சனசமூக நிலையத்தில் நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுளளது.

இந்த மருத்துவ முகாமில் பல் சிகிச்சை, கண் சிகிச்சை உட்பட பொது மருத்துவம் ஆகிய சிகிச்சைகள் இடம் பெறவுள்ளன. (கு-12)

★ ★ ★

(பருத்தித்துறை)

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை நிலைய மண்டபத்தில் தலைவர் ந. தவராசா தலைமையில் இடம் பெறவுள்ளது. (கு-11)

# பாகிஸ்தானின் கராச்சி நகரத்தில் ஒருமணி நேரத்தில் குண்டு வெடிப்பு

### நால்வர் பலி; பல பொதுமக்கள் காயம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின்கராச்சி நகரில் இடம்பெற்ற இரண்டு குண்டுவெடிப்புக்களினால் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் தெற்குத் துறைமுக நகரமான கராச்சியில் ஒருமணி நேர இடைவெளியில் இடம்பெற்ற இரு வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்களிலேயே இந்த அனர்த்தங்கள் இடம்பெற்றுள்ளன.

தீவிரவாதிகளுக்கான விசாரணைகள் நடைபெறும் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு அப்பால் முதலாவது குண்டு வெடித்துள்ளது.

அதே நேரம் முன்னாள் பாகிஸ்தானியப் பிரதமர் நவாப்ஷெரீப் மீதான விசாரணைகள் அந்த நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது என்றும் அந்த விசாரணைக்கும் குண்டு வெடிப்புக்கும் தொடர்பேதுமில்லை என்றும் அறியப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டாவது குண்டு முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றில் வெடித்தது. குண்டு வெடித்த சமயம் வெள்ளிக்கிழமை தொழுகைகளில் ஈடுபட்டிருந்த பல பொது மக்கள் தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிய வருகிறது.

காயமடைந்தவர்களில் பெரும்பாலானவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதனால் இறந்தோர் தொகை மேலும் அதிகரிக்கப்படும் என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை

இந்த இரு குண்டு வெடிப்புகளுக்கும், முன்னர் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் இந்தியாவே காரணம் என்று பாகிஸ்தானியப் புலனாய்வுப் பிரிவினர் குற்றஞ்சாட்டி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (கு-5)

# இந்திய விமானத்தை கடத்தியவர்கள் எவ்வாறு ஆயுதங்களைப் பெற்றனர்?

(புதுடில்லி)

இந்தியன் எயர்லைன் விமானம் கடத்தல் தொடர்பான விசாரணைகளை அடுத்து கடமையில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கார்த்மண்ட் விமான நிலைய மேலாளர் உட்பட 18 பேர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

மேலும் விமானத்தைக் கடத்திய தீவிரவாதக் குழுவினர் விமானத்திற்குள் எவ்வாறு ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டு சென்றார்கள் என்பது இன்றுவரை புரியாத புதிராகவே உள்ளது என்று நேபாளவிமானப் போக்குவரத்துத்துறைஅமைச்சர் தெரிவித்துள்ளார்.

(க-14)

# கார்கில் யுத்த அறிக்கையினை அரசு வெளியிடத் தயங்குவது ஏன்?

### சோனியா காந்தி

(புதுடில்லி)

கார்கில் யுத்த அறிக்கையை உடனடியாக அரசு வெளியிட வேண்டும். இந்த அறிக்கையில் என்ன தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவதற்கு மக்கள் மிக ஆவலாக உள்ளனர். இவ்வாறான ஒரு அறிக்கையை நாட்டின் பாதுகாப்பு கருதி வெளியிட மாட்டோம் என்று அரசு கூறுவது மிகவும் தவறான ஒரு செயலாகும் என்று காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி தெரிவித்துள்ளார்.

கார்கில் பகுதியில் பாகிஸ்தான் படையுடன் நடைபெற்ற யுத்தம் சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஓய்வுபெற்ற நீதிபதி எஸ். சுப்பிரமணியம் தலைமையில் மூவர் அடங்கிய குழு தனது அறிக்கையை அண்மையில் பிரதமர் வாஜ்பாயிடம் கையளித்த போது நாட்டின் பாதுகாப்பு கருதி இவ்வறிக்கையின் விபரங்களை வெளியிட வேண்டாம் என்று குழுவின் தலைவர் சுப்பிரமணியம் தெரிவித்ததாகப் பிரதமர் கூறியுள்ளார்.

ஆனால் இதுபற்றி சுப்பிரமணியத்திடம் கேட்டபோது தாம் எந்த ஒரு கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

(க-14)

## நேபாளத்தில் 6பொலிஸார்பலி

(காத்மண்டு)

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் நேபாள கம்யூனிஸ்ட் கட்சிகிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஆறுநேபாள பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

(க-14)

# நவீன ராணுவதொழில் நுட்பத்துக்கு கணிசமானநிதிஇவ்வாண்டுஒதுக்கீடு

### அமெரிக்க ஜனாதிபதி கிளிங்டன்

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நவீன இராணுவ தொழிநுட்ப வளர்ச்சிக்கு இவ்வருடம் கணிசமான நிதி ஒதுக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பில்கிளிங்டன் அறிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஸ்ரேற்ஒப் தயூனியன் நாட்டுக்கானஆண்டுத் திட்டத்தினை முன்வைக்கும் அமர்வில் உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நவீன இராணுவ தொழிநுட்ப வளர்ச்சிக்கு கணிசமான நிதி ஒதுக்குகின்ற அதேவேளையில், மருத்துவ ஆராய்ச்சி மற்றும் பூமிப்பந்து வெப்பம் அடைவதைத் தடுக்கும் முயற்சிகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும்,

வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்த வரையில் சீனாவுடன் வர்த்தக உறவுகளையும் ரஷ்யாவுடன் அரசியல் உறவுகளை பலப்படுத்துவதுடன் தொடர்ந்தும் உலகின் காவலனாய் செயற்படுவது தொடர்பான கருத்துக்களும் அமெரிக்க ஜனாதிபதியால் வலியுறுத்தப்பட்டது.

புதிய நூற்றாண்டுக்கு அமெரிக்காவைத் தயார்ப்படுத்துகின்ற அதேவேளையில் ஏனைய நாடுகளின் கடன்களை மன்னிப்பது தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது. (கு-9)

# பிரதமர் நவாப்ஷெரீப் மீதானவிசாரணை ஒத்தி வைக்கக்கோரி சட்டத்தரணிமனு!

(இஸ்லாமபாத்)

'பாகிஸ்தானில் இராணுவப் புரட்சி மூலம் அரசு கவிழ்க்கப்பட்டு இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டதை அடுத்து முன்னாள் பிரதமர் நவாப்செரீப் மீது மேற்கொள்ளப்பட்ட வழக்குகள் மீதான விசாரணைகளை, இராணுவ ஆட்சியாளர்களின் சட்டபூர்வத் தன்மை குறித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை இடை நிறுத்தப்பட வேண்டும், என்று பிரதமரின் சட்டத்தரணிகள் நீதிபதியைக் கேட்டுள்ளனர்.

இதனிடையே இராணுவ ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்து அவசரகால ஏற்பாட்டின் பிரகாரம் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளுமாறு இராணுவ ஆட்சியாளர்கள் விடுத்த உத்தரவை பாகிஸ்தானில் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசரும் அவருடன் ஏனைய ஆறு நீதிபதிகளும் நிராகரித்து வந்தனர் என்பதும் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் பதவிக்குப் புதியவர் ஒருவரை இராணுவ ஆட்சியாளர்கள் நியமித்துள்ளனர் என்பதும் தெரிந்ததே. (கு-7)

# ஏவுகணைப் பரிசோதனையை ஆரம்பிக்க வடகொரியா முடிவு செய்துள்ளது

(சியோல்)

ஏவுகணை குறுக்கீட்டு முறைமை ஒன்றைப் பரீட்சித்துப் பார்க்கப் போவதாக அமெரிக்கா அறிவித்ததற்கு பதிலடியாக தானும் ஏவுகணைப் பரிசோதனைகளை ஆரம்பிக்கவுள்ளதாக வடகொரியா தெரிவித்திருக்கின்றது.

தனது நீண்டதூர ஏவுகணைகளைப் பரீட்சிப்பதை நிறுத்தி வைப்பதாக வடகொரியா உறுதிவழங்கியதையடுத்து கடந்த செப்ரெம்பரில் வடகொரியா மீதான பொருளாதார தடைகளை தளர்த்தப்போவதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது.

இந்த வார முற்பகுதியில் அமெரிக்கா ஓர் ஏவுகணை இடைமறுப்பு பரிசோதனையை மேற்கொண்டதையடுத்தே வடகொரியா இவ்வாறு தெரிவித்துள்ளது.

(க-14)

### கொக்குவில் வளர்மதியின்

# விக்ரம் - ராஜன் - கங்கு இறுதியில் பல்கலைக்கழக கே.சீ.சீ.சீ அணிகள்

(திருநெல்வேலி)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம் நடாத்தி வரும் 'ராஜன் - விக்ரம் -கங்கு' கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இறுதிப்போட்டி இன்று காலை 9-00 மணிமுதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக அணியும், கொக்குவில் மத்திய சனசமூக (கே.சீ.சீ.சீ) அணியும் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன,

அழைக்கப்பட்ட நான்கு கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட .30 ஓவர்களைக் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் 40 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக அணி, கொக்குவில் கே. சீ. சீ. சீ. அணி, யாழ்.ஜொலிஸ்ரார் வி. க அணி, மானிப்பாய் பரிஷ் வி. க அணி ஆகிய அழைக்கப்பட்ட நான்கு கழகங்களுக்கிடையிலும் நடாத்தப்பட்ட லீக் முறையிலான முதலாவது சுற்றில் தலா இரு போட்டிகளில் வெற்றி பெற்ற இரண்டு அணிகளுமே இறுதி ஆட்டத்தில் மோதவுள்ளன.

முதற்சுற்றில்பல்கலைக்கழக அணி கே. சீ. சீ. சீ அணியையும், மானிப்பாய்பரிஷ்அணியையும், கே. சீ. சீ. சீ. அணி மானிப்பாய் பரிஷ், ஜொலிஸ்ரார்ஸ் ஆகிய அணிகளையும் வெற்றிகொண்டதன் மூலமே இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(கு-22)

## விளையாட்டுச் செய்திகள்

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கரணவாய்)

யாழ் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப 2. 30 மணிக்கு கல்லூரி மைதானத்தில்அதிபர் திருமதி இ. குட்டித்தம்பி தலைமையில் நடைபெறும்.

(கு-27)

## தாச்சிச் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் சங்க உப தலைவர் திரு.எஸ்.நவரத்தினராசா தலைமையில்இன்று பி.பகல் 2 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சகல விளையாட்டுக் கழகங்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (கு-வ)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூன்று நாள் சர்வதேசப் புவியியல் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 12 ஆம், 13 ஆம், 14 ஆம் திகதிகளில் மூன்று நாள சர்வதேச புவியியற் கருத்தரங்கு ஒன்று இடம் பெறவுள்ளது.

இந்தக்கருத்தரங்கு கனடா, பிரிட்டிஸ், கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நான்கு பேராசிரியர்கள் வருகைதரவுள்ளனர்.

''எமது பிரதேசத்தின் புனரமைப்பும் மீள் அபிவிருத்தியும்'' என்ற தலைப்பில் ஆங்கில மொழியில் நடைபெறும் இந்த சர்வதேசகருத்தரங்கில் பேராதனை, கொழும்பு பல்கலைக் கழகங்களைச்சேர்ந்த விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் கலந்துகொள்ள உள்ளனர்-

அத்துடன் பல்கலைக்கழக மாணவர், ஆசிரியர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர், யாழ். செயலகஅதிகாரிகள், மற்றும் பல திணைக்கள அதிகாரிகளும் இந்த கருத்தரங்கில் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்தகருத்தரங்கில் 20 இற்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும்இதில்சுமார் 70 பேர்வரையில் கலந்துகொள்ள உள்ளனர் என்றும் யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைப் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(கு-7)

## கலை வார நிகழ்வுகள்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களின் கலை வார நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் இருவாரங்களுக்கு நடைபெறவுள்ளது.

அண்மையில் கலைப்பீட மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை சென்ற வருடம் போல் கலவர வாரமாக இல்லாமல் கலைவாரமாக நிகழ்வுகள் நடைபெற மாணவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென கலைப்பீட மாணவர்களின் கலை வார விழாக் குழுவினர் மாணவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர், (கு-9)

நாடென்ப நாடா
வளத்தன நாடல்ல
நாடவளந்தரு நாடு.
- குறள்

# வலம்புரி

## புரிந்து செயல்படுவோம்

தமிழர் பிரதேசத்தைச் சூழ நீலக்கடல் பெரும் பகுதியை அணைத்திருப்பது புவியியல் சான்று கடல்வளம், தென்னை பனைவளம், நிலவளம் என்பவற்றை வைத்துக் கொண்டுஉண்மைஉழைப்பால் உயர்ந்தவர்களும், உயிர் வாழ்பவர்களுமே அநேகர். இது இவ்வாறிருக்க மண்ணின் சாபக்கேடாய் நிகழ்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தால் ஊதியம் இழந்து வாழ முடியாது தவிப்பவர்கள் பற்றிய சிந்தனைக் கிளர்ச்சி பலரையும் கவர்ந்திருக்கிறது.

நாட்டின் முதல்வளம், கடல்வளம், அத்துறைக்கென அமைச்சு ஒன்றும் இயங்குவது இங்குகவனத்திற் கொள்ள வேண்டும். எது எவ்வாறாக இருப்பினும் நீதியற்ற முறையில், உண்மைநிலை உள்ளத்தை தொடாதவகையில் மீனவர்கள் படும் அவலத்தையே இங்கு குறிப்பிட விழைகிறோம். நெய்தல் நிலமக்கள் படும் துண்பத்தையே சுட்டிக் காட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அவர்கள் அவலத்தைக் கண்ணுற்ற பல்வேறு தமிழ்க் கட்சிகளும், வேறு அவர்கள் சார்ந்தஅமைப்புக்களும் உரியவர்களுக்கு உரிமைக்குரல் எழுப்பி நீதிகோரி நிற்பது நியாயமே. பல கோடிபெறுமதி வாய்ந்த மீன் பிடி வலைகளும், ஏனைய அணியங்களும் கால எல்லை மீறி அழிந்து போவது கண்டு இதயம் வெதும்புகிறார்கள். பலர் கடன்பட்டு வாங்கிய பொருள்கள் அவை இருமுனைத்தாக்கத்தால் இதயம் அழிகிறார்கள்.

காலம் காலமாக உரிமைக் குரல் ஒலிக்கப்படுகிறது. வாழ்க்கையோடு போராடும் மக்களின் வாழ்வியலைச் சிதைத்தால் அது ஜனநாயகமாகாது. பாரிய குடும்பச் சுமையைத்தாங்க முடியாது பட்டினிச்சாவை எதிர் நோக்கும் மீனவர்களின் அழுகண்ணீர் துடைக்கப்பட வேண்டும். செல்வச் செழுமையோடு வாழ்ந்தவர்களைச் சீரழிக்க முனையக் கூடாது.

ஆழக் கடலெங்கும் படகோட்டி நாட்டிற்குவளம் சேர்த்த மக்கள் அவர்கள். நோர்வே, யப்பான் போன்ற முன்னணி நாடுகள் கடல் வளத்தால் களிப்படைபவை. எங்கள் நாடும் அந்த நிலைக்கு வளம் பெறவாய்ப்புண்டு.

- அன்புடன் ஆசிரியர்

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண புலிகளின்உடன்பாடு தேவை

## நோர்வே தூதுக்குழுவிடம் ஜோசப் எம். பி

'இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு எத்தகைய ஓர் தீர்வுத் திட்டமாக இருந்தாலும் அதில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உடன்பாடு இல்லாது அத் தீர்வுத் திட்டம் வெற்றி பெறப்போவதில்லை என, அரசும் பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. வும் நன்றாக உணர்ந்துள்ளன.'

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் த. வி. கூ. பாராளுமன்றக் குழுத் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் தம்மைச் சந்தித்த கனேடிய வெளிவிவகார அமைச்சின் தென்கிழக்காசியப் பிரிவின் அதிகாரி றொபேட் பேர்வியிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இனப் பிரச்சினை தொடர்பாக அரசினால் சமர்ப்பிக்கப்படும் எத்தகைய தீர்வும் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அதனைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நிராகரிக்கும் என்றும்-

அரசின் திட்டங்களுக்கு துணை போனால் களத்தில் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் போராட்டத்தையும், தியாகங்களையும், கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியல் போராட்டங்களையும் நாம் கொச்சைப் படுத்தியதாக அமையும்.

எனவே எத்தகைய தீர்வுத் திட்டமாக இருப்பினும் அதற்கு விடுதலைப் புலிகளின் சம்மதமும் தேவை என்றும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சு வார்த்தை அவசியம் என வற்புறுத்துகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு-கிழக்குப் பகுதிகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி எனவும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி எனவும் பிரித்து வைப்பதால் நோர்வே அரசின் நிதியுதவியுடன் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் தடைப்பட்டுள்ளது என்றும் இத்தகைய நிலையை அரசு தீர்க்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார் (கு-7)

## யாழ். தொலைக் கல்வி ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பிக்குக

(திருகோணமலை)

யாழ். மாவட்டத்திலிருந்து 1999 ஆம் ஆண்டு தொலைக் கல்விப் பாடநெறிகளுக்கு விண்ணப்பித்த பயிற்றப்படாத ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு விண்ணப்பிக்கலாம் என தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது,

யாழ்ப்பாணத்திலிருந்து தொலைக் கல்வி பாடநெறிகளுக்காக விண்ணப்பித்தவர்களின் பெயர் விபரங்கள் இதுவரை தேசிய கல்வி நிறுவகத்தில் பதியப் படவில்லை என்பதால் அதிபர்கள் குறிப்பிட்ட ஆசிரியர்கள் எந்த பயிற்சியையும் மேற்கொள்ளவில்லை என்று உறுதியளிக்கலாம் என்றும் உடனடியாக பயிற்சி கலாசாலைகளுக்கு விண்ணப்பிக்குமாறும் அந்தச் சங்கம் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளது. (கு-வ)

## தாய் தந்தையரை இழந்த மாணவர்களை தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள்

(அச்சுவேலி)

தாய் தந்தையரை இழந்த அல்லது யாராவது ஒருவரை இழந்த நிலையில் பாடசாலையில் கல்வி கற்கும், மற்றும் பாடசாலை செல்லும் வயதில் பாடசாலை செல்லாது வீட்டில் உள்ள மாணவர்களின் விபரங்கள் யாழ் கல்வி வலைய முறைசார கல்விப்பிரிவினரால் திரட்டப்பட்டுவருகின்றது.

இந்த நிலையில் வாழும் மாணவர்கள் தமது முழுமையான விபரங்களை தாம் கல்வி கற்கும் பாடசாலைகளின் ஊடாக அல்லது தத் தமது கிராம சனசமூக நிலையங்களின் தலைவர்களுக் கூடாக முறைசாரா கல்விப் பிரிவு, வலைய கல்வி திணைக்களம். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு முறைசாரக் கல்வி பிரிவின் செயல் திட்ட அலுவலர் ச.சிவானந்தம் கேட்டுக் கொண்டுள்ளார். (கு-14)

## மட்டக்களப்பில் முதலாம் திகதி

(மட்டக்களப்பு)

எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் மட்டக்

## சுவீடன் குழு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையத்துக்குசுவீடன் நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த நான்கு பிரதிநிதிகள் அண்மையில் விஜயம் செய்துள்ளனர்.

இவர்கள் தமது விஜயத்தின் போது பெண்களுக்கு இங்கு மேற்கொள்ளப்படும் பயிற்சி நெறிகளைப் பார்வையிட்டதோடு தமது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளதாக மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜினி சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(கு-7)

## கலந்துரையாடல்

[குருநகர்]

சிறுவர்களின் உளநல மேம்பாடு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று குருநகர் சனசமூக நிலைய முன்றலில் இன்று 30ஆம் திகதி மொனிபஸ் அடிகளார் தலைமையில் இடம் பெறவுள்ளது.

சுகவாழ்வு சிறுவர் மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வானது சுண்டுக்குளி, கைதடி, கொட்டடி, ஊர்காவற்றுறை. மெலிஞ்சிமுனை, பண்டத்தரிப்பு, மல்லாகம், சின்னமடு, வட்டுக்கோட்டை போன்ற இடங்களிலும் இப் பயிற்சி நெறிகள் விஸ்தரிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

மேற்படி பயிற்சிகளை சுகவாழ்வு உளநலப் பணிப்பாளர்கள் மேற் கொள்ளவுள்ளனர். (க-34)

## சாய்ப்புச் சட்டம் முதல் அமுலில்

களப்பு நகரில் சாய்ப்புச் சட்டம் கடுமையாக அமுலுக்கு வருவதாக மட்டக்களப்பு தொழில் ஆணையாளர் திருமதி. தேவி திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் ஆகிய நாள்களில் விசேட வியாபாரங்களில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு இரட்டிப்பு சம்பளம் வழங்கப்பட வேண்டும் எனவும் ஞாயிற்றுக்கிழமை உட்பட சகல விடுமுறை தினங்களிலும் சாய்ப்புச்சட்டம் அமுல் படுத்தப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கு-60)

## உளவியல் பயிற்சி நெறி

(குருநகர்)

''பெண்களுக்கான பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்'' என்பது பற்றிய உளவியல் பயிற்சி நெறி நேற்று ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சுகநல நிலையத்தில் டேமியன் அடிகள் தலைமையில் இடம் பெற்றுள்ளது,

யுனிசெவ் அனுசரணையுடன் இப் பயிற்சி ஆரம்பித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-34)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ். கிரிகெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் புதிய தலைவராக வி. பாலசிங்கம் செயலாளர், பொருளாளர்களாக சு. சிறீகாந்தன், வி. கே. சண்முகலிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் போதே இந்தத் தெரிவு இடம் பெற்றுள்ளது. (கு)

# குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் நாட்டையும் பாதிக்கவே செய்யும்

எங்கெல்லாம் ஒற்றுமையின் பலம் அதிகரிக்கின்றதோ அங்கெல்லாம் மகிழ்ச்சிநிறைந்த வாழ்வைக்காணலாம் கூட்டுக் குடும்ப வாழ்வில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிறைந்திருப்பதைக் காணலாம். சந்தேகம் புரிந்துகொள்ளாமை, ஏற்றுக் கொள்ளாமை என்ற நச்சுப்பகை ஒற்றுமையையும், அமைதியையும் குலைத்து அங்கே பிரிதல் என்ற நிலையை உருவாக்குகின்றது, எனவே பிரிவினைகள் நிம்மதியை தருவனபோல் காணப்பட்டாலும் அதன் மூலம் உண்மையான மகிழ்ச்சியை நாம் காணமுடியாது.

''ஏனெனில், யூதரானாலும் கிரோக்கரானாலும்அடிமைகளானாலும் உரிமைக் குடிகளானாலும் நாம் எல்லோரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்'' (1 கொரிந் 12:13) ஆனால், எம்மிடையே எத்தனை வேறுபாடுகள், பிளவுகள் நிலவுகின்றன. ஒரு உடலின் உறுப்புக்கள் எவ்வாறு தமக்குள்ளே ஒற்றுமையாக இருக்கின்றன. ஒன்று துன்புற்றால் எல்லாம் துன்புறுகின்றன. ஒன்று பெருமை பெற்றால் எல்லாம் சேர்ந்து மகிழ்கின்றன. கிறிஸ்துவைத் தலையாகக் கொண்ட உறுப்புக்களேதிருமுழுக்குப்பெற்றநாம் அனைவருமாவோம். எம்முடைய பிளவுகள் கிறிஸ்துவையும் பிளவுபடுத்துகின்றது.

குடும்பத்தில் ஏற்படும் பிரிவினைகள் ஏற்றுக்கொள்ளாமைகள் சமூகத்தையும், நாட்



டையும், ஏன் உலகம் முழுமையும் செல்லும் வலுவுள்ளவை. ஒருவருடைய தனிப்பட்ட பிரச்சினை ஒரு நாட்டின் பிரச்சினையாக உலகத்தின் பிரச்சினையாக சென்றடையும் சக்தி நிறைந்த புதிய மிலேனியத்துள் நாம் பிரவேசித்துள்ளோம்.

நீ எந்த அளவையால் அளக்கின்றாயோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும் என்று இயேசு சொன்னது போல, நாம் செய்யும் நன்மை, தீமைகள் எம்மை மறு உலகில், இவ்வுலகிலே தொடரப் போகின்றன. அன்பின் ஆட்சிதான் அமைதியைத் தரமுடியும் வன்முறையின் ஆட்சி வன்முறையையே பிரசவிக்கும்.

(யோவான்17:2ல்)இயேசு, எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக, என்று தம் சீடருக்காக வேண்டுகின்றார். ஒற்றுமையின் மூலமே அமைதியான வாழ்வு கிடைக்கும் என்பது நாம் அனுபவித்து வரும் துன்பத்தின் கசப்பான உண்மையாகும்.

எனவே வீட்டிலும், சமூகங்களிலும், நாட்டிலும் பிரிவினைகள் ஏற்படாமல் இருப்பதற்கு, பொறுமையுடனும், அன்புடனும், புரிந்துணர்வுடனும், நிதானத்துடனும் செயல்பட்டு, கருமங்களை ஆற்றுவோம். நல்லவற்றை எண்ணி, நல்லவற்றைச் செயற்படுத்துவோம், மன்னித்து மறப்போம். எமது செயற்பாட்டு பிரசவங்கள் ஒன்றுமைக் குழந்தைகளாய் நாட்டின் அமைதிக்கு வழிவகுக்கும். எமது சந்ததிக்கு புது உலகம் சமைத்துத்தரும்.

- சகோதரன் அன்ரனி பீற்றர் -

[ பரம பிதா காட்டிய பாதை ]

## இந்தியப் பொன்விழா ஜம்போறிக்கு யாழ்ப்பாணத்திலிருந்தும் இருவர்!

(கொழும்பு)

இந்தியாவின் சுதந்திரப்பொன் விழா நிகழ்வுகளை ஒட்டி இம்மாதம் 7 ஆம் திகதி முதல் தமிழ் நாட்டில் நடைபெற்று வரும் 'பொன்விழா ஜம்போறி'யில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு சாரணர்கள் இலங்கை அணியுடன் இந்தியா சென்றுள்ளனர்.

எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த சாரணர் ஜம்போறி நிகழ்வுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து – காங்கேசன் சாரணர் பிரிவைச் சேர்ந்த சி. செந்தில்ராஜன் (தெல். மகாஜனாக் கல்லூரி), எஸ். ஸ்ரீதக்சன் (இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரே இந்தியா சென்றுள்ளவர்களாவர் (கு-4)

# களுத்துறைக் கைதிகள் இடமாற்றம்

# உயர்மட்டக்குழு நாளை கூடுகிறது

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதா? இல்லையா? என்பது தொடர்பான உயர் மட்ட முடிவுகளை எடுப்பதற்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

களுத்துறைச் சிறையில் உள்ள கைதிகளை வேறு சிறைக் கூடங்களுக்கு மாற்றுவதற்கு எதிராக தமிழ்க் கைதிகள் குரல் கொடுத்து வந்ததோடு, தமிழ் அரசியல் தலைவர்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது இந்த உயர்மட்ட விசாரணைகளுக்காக நீதி அரசியல் விவகார அமைச்சரும் பிரதிநிதி அமைச்சருமான ஜீ. எல். பீரிஸ் தலைமையில் கூடவுள்ளது.

இந்தக் குழுவின் கூட்டம் நாளை திங்கட்கிழமை ஜீ. எல். பீரிஸ் தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது என்றும் —

சிறைச்சாலை அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குண்டு வெடிப்பு விசாரணையில் திருப்பம்

## குண்டு எங்கே பொருத்தப்பட்டிருந்தது?

### புலனாய்வாளர்களின் சந்தேகம்

(வவுனியா)

வவுனியா தபாலகத்தில் கடந்த வியாழக்கிழமை வைக்கப்பட்ட குண்டு தபால் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்ததா அல்லது பெட்டிக்கு வெளியே வைக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டதா என்று விசாரணையாளர்களிடையே சர்ச்சை கிளம்பியுள்ளதாகத் தெரியவருகிறது,

கருமபீடத்துக்கு அருகில் இருந்த இரண்டு தபால் பெட்டிகளும் சிதறிப்போயுள்ளதோடு இந்தப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்த ஒரு பக்கச் சுவரும் பலத்த சேதத்துக்குள்ளாகியிருப்பதனாலேயே குண்டு தபால் பெட்டிகளுக்கு வெளியே எங்காவது பொருத்தப்பட்டிருந்ததா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரியவருகிறது, (கு 103)

### இலங்கைக்கு...

தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் தொடர்ந்தும் எதிர்த்துவந்த அரசியல் தீர்வுத்திட்டத்தைக் கைவிட்டு அதையே வேறு பெயரில் கொண்டுவர சிங்கள அரசியல் வாதிகள் முயன்று வருகிறார்கள்.

நம்நாட்டில் இன்வாதம் இல்லை. பயங்கரவாதமே காணப்படுகிறது. நமது மக்கள் அரசியல் வாதிகளுக்கு பின்னால் சென்று தமது பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்புகள் பெற்றுக்கொடுப்பதற்கு முயல்கிறார்கள்.

அரசியல் வாதிகள் சுயநல அடிப்படையில் செயல்பட்டு பௌத்த சிங்கள இனத்திற்கு எதிராக தமது நடவடிக்கையை முன்னேடுங்கின்றார்கள் என்றார்.

### இல. பிரச்சினை...

தின் பிறந்ததின நிகழ்வில் கலந்துகொள்ளுமுகமாக தமது துணைவியாருடன் கொழும்பு வந்த இவரை கட்டுநாயக்க விமானநிலையத்தில் பிரதி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல வரவேற்றார்.

நேற்றைய தினத்திலிருந்து தொடர்ந்து 5 தினங்கள் கொழும்பில் தங்க உள்ளதாக இந்திர்குமார் குஜ்ரால் மேலும் தெரிவித்துள்ளார். (க)

### யுத்தத்தைக்...

செயலாற்ற வேண்டும்.

குண்டு வெடிப்புக்கள் போன்ற சம்பவங்கள் இந்த நாட்டின் பெறுமதிவாய்ந்த சொத்துக்களை நாசமாக்கி மக்களை நிர்க்கதியாக்கியுள்ளது. இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்காக சகலருக்குமிடையே தீர்க்கமான முடிவு ஒன்று தேவை.

அரசின் தீர்வுத்திட்டம் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்படும் போது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அதனை அங்கீகரிக்க வேண்டுமென வும், சகல மக்களும் அதை ஆதரிக்க வேண்டும் என்றும் அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (கு-7)

### களுத்துறை...

பெண்கள் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பெண் கைதிகளுக்கும் பெண் சிறைக் காவலர்களுக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பிலேயே 3 தமிழ்ப் பெண்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் களுத்துறைச்சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்,

காயமடைந்தவர்களின் பெயர்விபரங்களை உடனடியாகப் பெறமுடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

### நாடாளுமன்றில்...

டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் விசேடமாக இ. தொ. காவின் விசேட பிரதிநிதிகள் மூவர் முதல் முறையாகக் கலந்து கொண்டனர்.

இ. தொ. கா. எம். பி. களான ஆர். யோகராஜன், பி. பி. தேவராஜ், ஏ. எம்.ரீ. ராஜா ஆகிய மூவருமே இ. தொ. கா. சார்பாக புதிதாகக் கலந்து கொண்டவர்களாவார்.

இக்கூட்டத்தில் வழமை போல பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, முஸ்லீம் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்தில் தேர்தல் முறை மாற்றம் சம்பந்தமாகவும், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்புப் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

இந்த விசேட குழுவினர் முதற்கட்டமாக பெப்ரவரி மாத முற்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேசுவது என்றும்—

அது தொடர்பாக உத்தியோக பூர்வகடிதம் ஜனாதிபதியினால் இன்னும் சில நாள்களில் அனுப்பிவைக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஞ - ஞ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கண்டி திடீர் சுற்றிவளைப்பின் போது ஒருபெண் உட்பட எண்மர் கைது

(பேராதனை)

கண்டியில் நேற்றுத்திடீர் சுற்றிவளைப்பில் ஒருபெண், ஒரு முஸ்லீம் உட்பட எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்,

கண்டியில்நடைபெறவுள்ள புத்தபிக்கு ஒருவருக்குப்பட்டமளிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளதால் பாதுகாப்பு முன்னேற்பாடாகவே இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரு முஸ்லிமும் ஒரு பெண்ணும் அடங்குவர். [கு - வ)

## குண்டுவெடிப்பில் இறந்தவர்களின் இறுதிக் கிரியைகள் நேற்று வவுனியாவில்

(வவுனியா)

கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியாத் தபாலகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் மரணமான யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தபாலக ஊழியர்களின் இறுதிச் சடங்குகள் நேற்று வவுனியாவில் நடைபெற்றன.

பருத்தித்துறையைச்சேர்ந்த உப தபாலதிபர் சி. பாஸ்கரலிங்கம், காங்கேசன்துறையைச் சேர்ந்த அ. சந்திரசேகரம் ஆகியோரின் இறுதிச் சடங்குகள் நேற்று வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்தில் நடைபெற்றுச் சடலங்கள் தகனம் செய்யப்பட்டுள்ளது.

இவர்களது சடலங்களும் வவுனியா பிராந்திய தபால் அத்தியட்சகர் அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின் மயானம் நோக்கி எடுத்துச்செல்லப்பட்டது.

இவர்களில் 53 வயதுடைய உப தபாலதிபர் சி. பாஸ்கரலிங்கம் குண்டு வெடிப்பின் போது அந்த இடத்திலேயும் 37 வயதான தபால் ஊழியர் அ. சந்திரசேகரம் காயமடைந்து அநுராதபுரம்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பின் மரணமானார்கள்என்பது தெரிந்ததே. [கு-103]

### வடக்குக் கிழக்கு...

வரும் பிரச்சினைகள் விரிவாக ஆராயப்படவுள்ளதாக சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்தார். அவர் தெரிவித்திருப்பதாவது:

இலங்கை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கல் தொடர்பான 31 - 10 – 99ம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் தகுதி உடையவர்களை உடன் தரமுயர்த்துவதுடன், மூன்று வருட கஷ்டப் பிரதேச சேவைபற்றி அறிவித்தலால் ஆசிரியர்கள் மத்தியில் எழுந்துள்ள பிரச்சினைக்கு உடன் தீர்வு காணுதல்.

★ ஆசிரிய சேவையின்போது பட்டம்பெற்ற ஆசிரியர்களையும், பட்டதாரி பயிலுநர் நியமனம் பெற்று ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்து இதுவரை நிரந்தர நியமனம் கிடைக்காதவர்களையும் பட்டதாரி சேவைக்குள் உள்வாங்குவதுடன் உரிய சம்பளமும் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

★ தொண்டர் ஆசிரியர்களாக இருந்து 1992 இல் தகுதிகான் ஆசிரியர் நியமனம் பெற்று தொலைக் கல்வி மூலம் ஆசிரியர் பயிற்சியை முடித்தவர்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கி உரிய சம்பளம் வழங்கல்.

★ அதிபர் ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாத சம்பள நிலுவைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

★ தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சியை முடித்தும் இதுவரை சான்றிதழ் கிடைக்காதவர்களுக்கு சான்றிதழ் பெற்றுக் கொடுக்க ஆவன செய்தல்.

★ தீவகம் மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் நீண்டகாலம் கடமையாற்றியவர்களுக்கு இடமாற்றம் கிடைக்க ஆவன செய்தல்.

★ ஆசிரியர்களுக்கான இடமாற்றம் குறிப்பிட்ட திட்டத்திற்கமைவாக ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நடைமுறைப் படுத்த ஆவன செய்தல்.

### புதிய கல்வி...

கல்வி அமைச்சின் மேலதிகக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட போதிலும் தற்போது அவர் வடமராட்சிக் கல்வி வலயத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

இதேவேளை வடமராட்சிக் கல்விவலயத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றும் எஸ். சிவராஜா வடக்குக் கிழக்கு மாகாண சபையின் மேலதிகக் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களுக்கான கடிதம் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வடக்குக் - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் திரு சுந்தரம் டிவகலாலா நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தார். [ந]

### பட்டதாரி பயிலுநர்...

நேற்று வலம்புரிக்குத் தெரிவித்தார் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களில் ஒரு தொகுதியினருக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவில்லையென குறிப்பிட்ட ஆசிரியர்கள் வலம்புரிக்கு எழுதிய கடிதம் தொடர்பாகச் செயலாளருடன் தொடர்பு கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆசிரியர்கள் எடுத்த லீவு விபரம், பட்டச்சான்றிதழின் உறுதிப் படுத்தப்பட்ட ஆவனம் போன்றவை கிடைப்பதிலுள்ள காலதாமதம் காரணமாகவே நிரந்தர நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)

## ஆயர்கள் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைஇனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் உதவும் வகையில் இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வே தூதுக்குழுவினரை இரத்தினபுரி ஆயர் ரஞ்சித் மல்கம், மன்னார் ஆயர் யோசப் ராயப்பு ஆகியோர் சந்தித்து நிலமைகளை விளக்கிக் கூறியுள்ளனர்,

இந்தச் சந்திப்பின்போது விரைவில் சில ஆயர்களைக் கொண்ட குழு ஒன்று வன்னிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசவுள்ளது என்று கூறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது, (கு - வ)

## பால்மா தட்டுப்பாடு நீங்கியது

குடாநாட்டுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களின் ஒரு தொகுதி கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டதையடுத்து பால்மா வகைகளுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

அண்மையில் ஏற்பட்டிருந்த தட்டுப்பாட்டின் போது லக்ஸ்பிறே 85 ரூபாவிலிருந்து 100 ரூபா வரையிலும் அங்கர் 93 ரூபாவிலிருந்து 130 ரூபா வரையிலும் விற்பனையாகி வந்தமை தெரிந்ததே. (கு-7)

## வவுனியா தபாலகம் இடமாற்றம்

(வவுனியா)

வவுனியா தபாலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து தபாலக கருமபீடங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

குண்டுவெடிப்பினால் கட்டடம் முற்றாக சேதமடைந்துள்ளதோடு பொலீஸ் மற்றும் இராணுவத்தினரின் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருவதால் தபாலகத்தை புதிய இடம் ஒன்றில் இயங்கவைக்குமாறு மேலிடங்களிலிருந்து கிடைத்த உத்தரவையடுத்தே இந்த இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தபால் அத்தியட்சகர் அலுவலகம் தற்காலிக தபாலகமாக இயங்கிவருகின்றது.

### முன்னாள்...

தே. கட்சி அரசாங்கத்தில் சபாநாயகராகவும், விவசாய அபிவிருத்தி அமைச்சராகவும் வடமத்திய மற்றும் சப்ரகமுவா மாகாணங்களின் ஆளுநராகவும் கடமைபுரிந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (கு-க)